# விஜய் ஆட்சியை வீட்டுக்கு அனுப்பும் வரை தி.மு.க. தொண்டர்கள் ஓய மாட்டார்கள்!

## புதுக்கோட்டையில் மறியல் போராட்டத்தில் கைதான நிலையில் வடக்கு மாவட்டச் செயலாளர் கே.கே.செல்லபாண்டியன் பேட்டி!

புதுக்கோட்டை.ஆகஆ6

புதுக்கோட்டை வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் உதயநிதி ஸ்டாலின் கைதை கண்டித்துபுதுக் கோட்டை பிருந்தா வனத்தில் நடந்த ஆர்ப்பாட்டத்தில் வடக்கு மாவட்ட செயலாளர் கே.கே.செல்லபாண்டியன் உள்ளிட்ட 200க்கும் மேற்பட்ட திமுகவினர் கைதானார்கள் இந்த நிலையில் வடக்கு மாவட்ட செயலாளர் கே.கே.செல்லபாண்டியன் செய்தியாளர்களிடம் கூறியதாவது

தஞ்சையில் நடந்த ஆர்ப்பாட்டத்தில் திரிஷா பற்றி தொண்டர்கள் கூறிய தற்கான விளக்கத்தை மேடையிலே கூறிவிட்ட நிலையில் நாளை சட்டப் பேரவையில் காவிரி நீர் பிரச்சினை எழுப்பப்படும் என்ற அச்சத்தில் உதயநிதியுடன் விவாதம் செய்ய அச்சப்பட்டு, திட்டமிட்டு உதயநிதியை காலையிலே கைது செய்து அவரை நகர விடாமலே அங்கிருந்து போலீஸ் வேனிலே தஞ்சாவூருக்கு அழைத்து வந்துள்ளனர். திட்டமிட்டே பொய் வழக்கு போட்டு ஒரு வரலாற்றுப் பிழையை விஜய் செய்துள்ளார். எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி கைது செய்யப்பட்டதற்கு வடக்கு மாவட்ட



தி.மு.க. சார்பில் அழுத்தமான கண்டனத்தை பதிவு செய்கிறோம்.

திமுக தலைவர் தளபதி நினைத்திருந்தால் தமிழகத்தில் விஜய் ஆட்சியை வரவிடாமலே தடுத்திருக்கலாம். திமுக தலைவர் பெருந்தன்மையால் தமிழக வெற்றி கழகம் ஆட்சி கட்டிலில் அமர்ந்துள்ளத காவிரி பிரச்சினையை திசை திருப்பவே இந்த கைது நாடகம் நடத்தியுள்ளார் விஜய். பாஜக தலைவர் நைனார் நாகேந்திரன் திரிஷாவை பற்றி வெளிப்படையாக விமர்சித்த போது கைது செய்ய தயங்கிய விஜய் அரசு கண்டு கொள்ளவில்லை தைரியம் இருந்திருந்தால் அப்போதே நைனார் நாகேந்திரனை கைது செய்திருக்கலாம் ஏன் செய்யவில்லை?

பா.ஜ.க.வின் தத்துப் பிள்ளையாக விஜய் செயல்படுகிறார் வீட்டில் வாய்க்கரிசி போட்டுக் கொண்டு தான் திமுகவில் இணைந்துள்ளோம். ஒரு போதும் மிரட்டல் உருட்டலுக்கு திமுக தொண்டர்கள் அஞ்ச மாட்டார்கள்.

உதயநிதி ஸ்டாலின் விடுதலை ஆகும் வரை வடக்கு மாவட்ட திமுக தொடர் போராட்டங்களை நடத்தும். விஜய் ஆட்சியை வீட்டுக்கு அனுப்பும் வரை இந்த போராட்டங்கள் தொடர்ந்து கொண்டே இருக்கும்.

இவ்வாறு வடக்கு மாவட்ட செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் கூறினார். பேட்டியின் போது முன்னாள் மாவட்ட கவுன்சிலர் டி.செல்வம் குலவாய்ப்பட்டி சி.சண்முகம் அரங்கநாயகம் உள்ளிட்ட மாவட்ட, ஒன்றிய , மாநகர திமுக நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

---

### கோவை மாநகர் மாவட்டம் முழுவதும்

# முத்தமிழறிஞர் கலைஞரின் 8ஆம் ஆண்டு நினைவு நாள் அமைதி பேரணி, திருவுருவச்சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை!

## மாநகர் மாவட்டப் பொறுப்பாளர் துரை.செந்தமிழ்ச் செல்வன் அறிக்கை!

கோவை, ஆக. 7-

தமிழினத் தலைவர், முத்தமிழ்றிஞர் கலைஞர் அவர்களின் நினைவு நாளை முன்னிட்டு ஆகஸ்ட் 7ம் தேதி இன்று கோவை மாநகர் மாவட்டம் முழுவதும் நினைவுநாள்நிகழ்ச்சிகளை நடத்திட வேண்டும் என்று கோவை மாநகர் மாவட்ட பொறுப்பாளர் துரை.செந்தமிழ் செல்வன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.



அவரது அறிக்கை வருமாறு :

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தமிழர் வரலாற்றில் என்றும் அழியாத இடத்தைப் பெற்ற மாமனிதர். அவரது அரசியல் வாழ்வும், இலக்கியப் பங்களிப்பும், சமூகநீதிக்கான இடையறாத போராட்டங்களும், தமிழ்மொழி வளர்ச்சிக்காக ஆற்றிய அரும்பணிகளும் தலைமுறைகள் கடந்தும் வழிகாட்டும் கலங்கரை விளக்கமாகத் திகழ்கின்றன. கல்வி, சமூக நீதி, இடஒதுக்கீடு, பெண்கள் முன்னேற்றம், விவசாயிகள் நலன், தொழிலாளர் உரிமைகள், உள்ளாட்சி அமைப்புகளின் வலிமை, தமிழ்மொழி வளர்ச்சி, தமிழர் பண்பாட்டு பெருமை உள்ளிட்ட அனைத்துத் துறைகளிலும் வரலாற்றுச் சாதனைகளைப் படைத்து தமிழகத்தை முன்னேற்றப் பாதையில் அழைத்துச் சென்ற தமிழினத் தலைவர் கலைஞர் அவர்கள் உருவாக்கிய மக்கள் நலத் திட்டங்களும், சட்டங்களும், கொள்கைகளும் இன்றளவும் தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கான உறுதியான அடித்தளமாக விளங்கி வருகின்றன.

முத்தமிழறிஞர் கலைஞர் நினைவு நாளை முன்னிட்டு மாநகர மாவட்ட கழக நிர்வாகிகள், பகுதி, வட்டக் கழக செயலாளர்கள், பொறுப்பாளர்கள் மற்றும் அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள் அனைவரும் தங்களது பகுதிகளில் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்துதல், பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குதல், அன்னதானம், மாணவ, மாணவிகளுக்கு கல்வி உபகரணங்கள் வழங்குதல் உள்ளிட்ட மக்கள் நலப் பணிகளை சிறப்பாக மேற்கொள்ள வேண்டும். மேலும், கலைஞர் அவர்கள் வாழ்நாள் முழுவதும் வலியுறுத்திய சமூகநீதி, சுயமரியாதை, சமத்துவம், மதச்சார்பின்மை, மொழி உரிமை ஆகிய உயரிய கொள்கைகளை பொதுமக்களிடம் எடுத்துரைக்கும் நிகழ்ச்சிகளும் நடத்திட வேண்டுமாய் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

அது சமயம் கோவை மாநகர் மாவட்டத்தைச் சேர்ந்த மாநில, மாநகர் மாவட்டக் கழக நிர்வாகிகள், பகுதி, வட்டக் கழக செயலாளர்கள் பொறுப்பாளர்கள், நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக முன்னோடிகள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள், கழக உடன்பிறப்புகள், தொண்டர்கள் அனைவரும் தங்களது பகுதிகளில் பெருந்திரளாகப் பங்கேற்று, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவு நாளை மக்கள் நலப் பணிகளுடன் எழுச்சியோடு அனுசரிக்க வேண்டும் என அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

---

### முத்தமிழ் அறிஞர் கலைஞர் 8ஆம் ஆண்டு நினைவு நாள்!

# நாகை மாவட்டம் முழுவதும் மாலை அணிவித்து, நலத்திட்ட உதவிகள் வழங்கி சிறப்பாக கொண்டாடுவீர்!

## மாவட்டக் கழகச் செயலாளர் என்.கௌதமன் வேண்டுகேள்!

நாகை, ஆக 7

நாகை மாவட்டக் கழகச் செயலாளர் என்.கௌதமன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது.

தமிழ் மொழியை செம்மொழியாக்கி தமிழுக்கும், தமிழ் நாட்டிற்கும் பாதுகாப்பு அரணாக இருந்த முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் தமிழ்நாடு சட்டமன்ற தேர்தலில் போட்டியிட்ட 13 முறையும் வெற்றியை கண்டு 5 முறை 20 ஆண்டுகள் தமிழக முதல்வராக இருந்த போது அனைவருக்கும் பாதுகாப்பான குடிநீர் வழங்க தமிழகம் முழுவதும் மேல் நிலை நீர் தேக்க தொட்டியை அமைத்தும், கை ரிக்ஷாவை ஒழித்தும், மகளிர் சுய உதவி குழுவை உருவாக்கி, பள்ளி மாணவ, மாணவிகளுக்கு இலவச பஸ் பாஸ், முதல் பட்டதாரியின் படிப்பு செலவை அரசே ஏற்கும் திட்டம், கற்பினி பெண்களுக்கு உதவித் தொகை என எண்ணற்ற திட்டங்களை கொண்டு வந்த தமிழ்நாட்டிடன் வளர்ச்சிக்கு வித்திட்ட முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் 50 ஆண்டுக்கு மேலாக தி.மு.க. தலைவர், 80 ஆண்டு பொதுவாக்கை, 70 ஆண்டு திரைத்துறை என கலை, இலக்கியம், எழுத்து என தான் தொட்ட துணை அனைத்திலும் கலைஞருக்கு



நிகர் கலைஞர் என்று வாழ்ந்து பல பிரதமர்கள், ஜனாதிபதிகளை உருவாக்கிய மாபெரும் தலைவர் கலைஞர் அவர்களின் 8ம் ஆண்டு நினைவு நாளான இன்று 7.8.2024 காலை 7.00 மணிக்கு கலைஞர் பிறந்த திருக்குவளையில் உள்ள இல்லத்தில் வைக்கப்பட்டுள்ள கலைஞர் சிலைக்கு மாலை அணிவிக்கும் நிகழ்ச்சி நடைபெறுகிறது. அதைத் தொடர்ந்து நாகையில் மாவட்ட கழக அலுவலகமான தளபதி அறிவாலயத்தில் வைக்கப்பட்ட முத்தமிழ் அறிஞர் கலைஞர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தும் நிகழ்ச்சி நடைபெறுகிறது.

மேலும் கலைஞர் அவர்களின் நினைவு நாளை முன்னிட்டு நாகை மாவட்டத்தில் உள்ள கலைஞர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்திட வேண்டும், மேலும் நாகை மாவட்டத்தில் உள்ள அனைத்து ஒன்றிய, நகர, பேரூர் பகுதியில் உள்ள கிளைகள், வார்டுகள் தோறும் கலைஞர் திருஉருவப் படத்தை வைத்து மாலை அணிவித்து மரியாதை செலுத்தி வேண்டும். இதற்காக ஏற்பாடுகளை ஒன்றிய நகர, பேரூர் செயலாளர்கள் செய்திட வேண்டும். இந் நிகழ்ச்சிகளில் மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு பொதுக் குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், கிளை, வார்டு கழக நிர்வாகிகள், கழக செயல்வீரர்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்திட வேண்டும். இவ்வாறு அந்த அறிக்கையில் நாகை மாவட்டக் கழகச் செயலாளர் என்.கௌதமன் கூறியுள்ளார்.

---

### அனைவருக்கும் குறைந்தபட்ச

# ஓய்வூதியத் திட்டம் அறிமுகப்படுத்தப்படுமா?


## மாநிலங்களவையில் இரா.கிரிராஜன் கேள்வி!

புதுடெல்லி, ஆக. 7-

நாடாளுமன்ற மழைக் கால கூட்டத்தொடரில் கலந்துகொண்டுள்ள தி.மு.க. எம்.பி. இரா.கிரிராஜன், தேசிய ஓய்வூதியத் திட்டத்துடன் பழைய ஓய்வூதியத் திட்டத்தை யும் மீண்டும் கொண்டுவர திட்டம் உள்ளதா? முதியோர், வயதான மற்றும் ஆதரவற்ற பெண்கள் ஆகியோருக்கு போதுமான நிதி உதவியை வழங்கும் வகையில் ‘அனைவருக்குமான குறைந்தபட்ச ஓய்வூதியத் திட்டத்தை’ அறிமுகப்படுத்த திட்டம் உள்ளதா? சேம நல நிதி மற்றும் பிற ஓய்வூதியக் கணக்குகளில் உரிமை கோரப்படாத மொத்தத் தொகை எவ்வளவு? போன்ற கேள்விகளை தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை அமைச்சரிடம் எழுப்பியிருந்தார்.

இதற்கு பதிலளித்துள்ள ஒன்றிய அரசின் தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை இணை அமைச்சர் சுஷ்ரி ஷோபா கரண்ட்லஜே,தேசிய ஓய்வூதியத் திட்டத்துடன் பழைய ஓய்வூதியத் திட்டத்தையும் மீண்டும் கொண்டுவர திட்டம் என்பது நிதி அமைச்சக செலவினத் துறையின்படி, எந்த முன்மொழிவும் பரிசீலனையில் இல்லை என பதிலளித்துள்ளார்.

சமூகப் பாதுகாப்புச் சட்டம், 2020, கிக் பணியாளர்கள் மற்றும் பிளாட்ஃபார்ம் பணியாளர்களுக்கான ஆயுள் மற்றும் ஊனமுற்றோர் காப்பீடு, விபத்துக் காப்பீடு, உடல்நலம் மற்றும் மகப்பேறு நலன்கள், முதியோர் பாதுகாப்பு போன்ற சமூகப் பாதுகாப்பு வழங்குவதாகவும், நலத்திட்டங்களுக்கு நிதியளிப்பதற்காக சமூகப் பாதுகாப்பு நிதியை அமைப்பதற்கும் இச்சட்டம் வழிவகை செய்வதாகவும், அமைப்புசாரா தொழிலாளர்கள், கிக் பணியாளர்கள் மற்றும் பிளாட்ஃபார்ம் பணியாளர்களின் பதிவிற்காக வழிவகை செய்கிறது என்றும், பணியாளர் ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் உள்ள ஓய்வூதிய நிதி என்கிற திரட்டப்பட்ட நிதிக்கு முதலாளிகள் மற்றும் மத்திய அரசிடமிருந்து பங்களிப்புகள் பெறப்படுகின்றன என்றும், செயல் படாத சேம நல நிதி கணக்குகளில் உள்ள மொத்தத் தொகை ரூ. 9330.56 கோடி இருப்பதாகவும் பதிலளிக்கப்பட்டுள்ளது.



EPFO, EPF சேவைகள் மற்றும் செயல்படாத கணக்குகள் தொடர்பான தகவல்களை முதலாளிகள் மற்றும் ஊழியர்களிடையே பரப்புவதற்காக, சமூக ஊடகத் தளங்கள் மூலமாகவும், நிதி ஆப்கே நிகத் 2.0 முகாம்களை ஏற்பாடு செய்வதன் மூலமாக வும் மக்களைச் சென்றடைதல் மற்றும் விழிப்புணர்வு முயற்சிகளை மேற்கொண்டுள்ளதாக ஒன்றிய அரசு தி.மு.க. எம்.பி. கிரிராஜனுக்கு பதிலளித்துள்ளது.



தமிழ்நாடு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவரும் , கழக இளைஞர் அணி செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் கைது செய்யப்பட்டதை கண்டித்து சேலம் கிழக்கு மாவட்டம் வாழப்பாடி ஒன்றியம் பேருந்து நிலையம் முன்பு ஒன்றிய செயலாளர்கள் மாதேஸ்வரன், சக்கரவர்த்தி , முனைவர் அ. சீனிவாசன் , பேரூர் செயலாளர்கள் செல்வம், சுப்பிரமணியன், ஆகியோர் தலைமையில் கழக நிர்வாகிகள் சாலை மறியிலில் ஈடுப்பட்டனர்.

---

## ‘வாட்ஸ் அப்’பில் வலம் வருவது!




---

# புரியுது புரியுது!

எங்கும் யார் பெயரையும் சொல்லாமல்
கடந்து போன காவேரித் தண்ணியில

இரட்டை அர்த்தம் இருப்பதாக
குற்றஞ்சொல்லி

அதிலும்
முதல் அர்த்தத்தை
எடுத்துக்கொள்ளாமல்

இரண்டாம் அர்த்தம்
என்கிற கற்பனையின் மீது
கதைபுனைந்து
எதிர்க்கட்சித் தலைவரை பழிவாங்க
அலைவது ஏன்..


புரியுது
புரியுது...
ஏன்னா

உதயநிதி
சட்டசபைக்கு
வந்தால்
ஏகத்துக்கும் பட்டியலிட்டு
கேள்வி
எழுப்புவார்..

அதுக்கு வீட்டுக்குப்போயி
ஆறுமணிக்கு மேலே
ஆள்வச்சு எழுதி
டிவிட்டர்ல பதில்போடனும்

அதானே..

என்னநாஞ்
சொல்றது



**மருது அழகுராஜ்**
கழகச் செய்தித்
தொடர்புக் குழு
துணைத் தலைவர்

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ஆயிரம்விளக்கு எஸ்.ஏ.எம்.உசேன்

### ஆகஸ்ட் 6 (2019)



தனது இளமைக் காலத்திலேயே, கழகக் கொள்கையால் ஈர்க்கப்பட்டு, தனது குடும்பத்தைப் பற்றிகூட கவலைப்படாமல் ஆயிரம்விளக்கு பகுதி கழகப் பணிகளில் முழுநேரம் ஈடுபட்டு வந்தவர்.

வட்டச் செயலாளர், பகுதிச் செயலாளர், மாவட்டத் துணைச் செயலாளர், துணை அமைப்புச் செயலாளர், கொள்கைப் பரப்பு இணைச் செயலாளர், தலைமை நிலையச் செயலாளர் என கழகத்தில் பல்வேறு பொறுப்புகளை வகித்தவர்.

திருவல்லிக்கேணி சட்டமன்ற தொகுதியில் கழகத்தின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்று, அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

நெருக்கடிநிலை காலத்தில் மிசா சட்டத்தின்படி இருமுறை கைது செய்யப்பட்டார். மேலும், கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகத்தின் சார்பில் 2013ஆம் ஆண்டு நடைபெற்ற முப்பெரும் விழாவில் “கலைஞர் விருது” வழங்கப்பட்டது.

“தி.மு.கழகத்தின் கையிலே கிடைத்த ஆயிரம்விளக்கின் அற்புத விளக்கு உசேன்” என்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் பாராட்டப் பெற்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**